DINAMANI

12 MAR 2022

PAGE 2

# புதுவை பல்கலை.க்கு பிரான்ஸ் மாணவர்கள் வருகை



புதுவை பல்கலைக்கழகத் துணைவேந்தர் குர்மீத்சிங்கை சந்தித்து வாழ்த்து பெற்ற பாரீஸ் பல்கலைக்கழக முதுநிலை சட்டப் படிப்பு பயிலும் மாணவர்கள்.

**புதுச்சேரி, மார்ச் 11:** புதுவை பல்கலைக்கழகத்துக்கு உயர் கல்வி பயில பாரீஸ் பல்கலைக்கழக மாணவர்கள் வந்துள்ளனர்.

புதுவை பல்கலைக்கழகம், பிரான்ஸ் நாட்டின் பாரீஸ் பல்கலைக்கழகத்துடன் உயர் கல்வி தொடர்பாக கடந்த 2019-ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி, புதுவை பல்கலைக்கழகத்தில் சமூகப் பொருளாதார நிர்வாகம், சட்டத் துறை முதுநிலை மாணவர்கள் 10 பேர் மூன்றாமாண்டு படிப்பை பாரீஸ் பல்கலைகழகத்தில் தொடர உள்ளனர்.

அதேபோன்று, பாரீஸ் பல்கலைக்கழக மாணவர்கள் 6 பேர் புதுவை பல்கலைக்கழகத்தில் மேல்படிப்பைத் தொடர வந்துள்ளனர். அவர்கள் துணைவேந்தர் குர்மீத்சிங்கை வியாழக்கிழமை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.